தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள்—வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 17/1982) நிறைவேற்றப் பெறவேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்டமுன் வடிவு 1982

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்பு தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (*சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 32 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையையும் பணி நிபந்தனைகளையும் முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1982) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

---

*1982 மார்ச் 27 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.